# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 70/2022 தேதி-24.03.2026

(P.W.1) . கிறிஸ்டோபர் மோசஸ்

**1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கின் சர்வே எண் 534/2 என்றால் சரிதான். அந்த சொத்தானது எனது அப்பா வல்சலம் மோசஸ் குடும்பத்தாருக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்து பத்மநாபபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண் 407/1981 படி உரிமைப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்தில் எனது அம்மாவும் அப்பாவும 14.02.2005 ஆம் தேதி டேவிட்சன் என்பவருக்கு 5 சென்ட் சொத்தை விலைக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். 13.06.2006 ஆம் தேதி மேற்படி 5 சென்ட் சொத்தை தொட்டு மேற்கு பக்கம் 12 1/2 சென்ட் சொத்தை எனது அப்பாவும் எனது இரண்டு சகோதரிகளும் மேற்படி டேவிட்சன் என்பவருக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் ஆவணம் எழுதிக்கொடுத்தார்கள் ஆனால் அவர்களுக்கு அதில் உரிமை இல்லை.

ஆவணப்படி டேவிட்சனுக்கு 17 1/2 சென்ட் சொத்து கிடைத்தது என்றால் எனக்கு தெரியாமல் எழுதிக்கொடுத்திருக்கலாம். மேற்படி 17 1/2 சென்ட் சொத்தில் மொத்தம் 55 சென்ட் சொத்தின் தெற்கு மேற்கு எல்கை கொள்வித்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி 17 1/2 சென்ட் சொத்தை எல்கை நிர்ணயம் செய்யவேண்டும் என்பதற்காக டேவிட்சன் அசல் வழக்கு எண் 395/2009 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும் எனது மனைவி சஜி என்ற அனிதாவும் தரப்பினர்களாக இருந்தோம் என்றால் சரிதான். அசல் வழக்கு 395/2009 ல் வாதி டேவிட்சனுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் சரிதான். அதை எதிர்த்து மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் A.S.6/2014 என்ற மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடும் தள்ளுபடியானது என்றால் சரிதான்.

நான் இந்த வழக்கில் இடிக்கப்பட்டதாக கூறப்படும் காம்போண்ட் சுவர் இருக்கும் இடத்தில்தான் மேற்படி டேவிட்சன் அதிர்போட்டு தரவேண்டுமென்று மேற்படி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. அசல் வழக்கு 395/2009 வழக்கை தான் வாங்கிய சொத்திற்கு எல்கை நிர்ணயம் செய்ய கோரிதான்

டேவிட்சன் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி டேவிட்சன் வாங்கிய 17 1/2 சென்டில் தெற்கு அற்றம் 2 1/2 சென்ட் சொத்தை கிழக்கு மேற்கு எல்கையை கொள்வித்து 1 ஆம் பிரதிவாதிக்கு 21.12.2015 ஆம் தேதி 2957/2015 கிரைய ஆவணப்படி கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி 2 1/2 சென்ட் சொத்தின் கிழக்கு பக்கம் 1 ஆம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் 1 ஆம் பிரதிவாதியின் கணவர் ரவிக்குமாரின் வீடு உள்ளது அந்த வீட்டில்தான் 1 ஆம் பிரதிவாதி வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

மீதமிருக்கும் 15 சென்ட் சொத்தை 2 ஆம் பிரதிவாதி பெயரில் 09.02.2018 ஆம் தேதி ஆவண எண் 666/2018 கிரைய ஆவணப்படி கொடுத்தார் என்றால் பொய்யாக உருவாக்கப்பட்ட ஆவணமாகும். 17 1/2 சென்ட் சொத்தின் வடக்கு பக்கத்தில்தான் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது கிழக்கு மேற்காக போடப்பட்டுள்ளது அத்துமீறி போடப்பட்டது ஆகும். மேற்படி முள்வேலிக்கு வடக்கு மேற்கு எல்கையில் எனது குடும்ப கல்லறை உள்ளது என்றால் சரியல்ல. எனது அம்மாவின் கல்லறை உள்ளது. இந்த வழக்கில் டேவிட்சன் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 395/2009 வழக்கையும் அதன் மேல்முறையீட்டு வழக்கையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். டேவிட்சனையோ அவரது வாரிசுகளையோ இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

1 ஆம் பிரதிவாதி வாங்கியிருக்கும் 2 1/2 சென்ட் சொத்திற்கு எதிராக இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். எனக்கு உரிமையில்லாத சொத்தை உண்மையை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த சொத்து முழு உரிமைப்பட்டது என்பதைக்காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் நகலை தாக்கல் செய்துள்ளேன். அசல் ஆவணங்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் அங்கு இருக்கிறது. அசல் வழக்கு எண் 395/2009 மற்றும் A.S.6/2014 தீர்ப்புரையையும் இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியாது. மேற்படி தீர்ப்பை மறைத்தும் அந்த தீர்ப்புக்கு மாறாகவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் அதை தாக்கல் செய்ய முடியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் டேவிட்சனுக்கு முழு உரிமைப்பட்ட சொத்தைதான் கிரையம் வாங்கியுள்ளார்கள் அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த

உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் பதிவு செய்யப்பட்ட எந்த ஆவணத்தின் மூலமும் இந்த வழக்கை தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை உரிமையில்லாமலும் உண்மையை மறைத்தும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.